# என் பெயர், என் மொழி, என் இணையம் : IDN (ஐடிஎன்) நேரடியாக பரிசோதிக்கப்படுகிறது.

***ICANN (ஐசிஏஎன்என்) சர்தேசப்படுத்தப்பட்ட டொமைன் பெயர்களின் உலகளாவிய பரிசோதனையைத் துவங்குகிறது.***

15 அகடோபர் 2007

**மரினா டெல் ரே, கலிபோர்னியா:** உலகம் முழுவதும் உள்ள இணைய பயனாளர்கள் தறபோது தங்கள் பெயர்ளை தங்கள் மொழிகளில் தங்கள் இணைத்தில், இன்டர்நெட் கார்ப்பரேஷன் ஃபார் அசைன்ட் நேம்ஸ் அண்டு நம்பர்ஸ் (ICANN) துவக்கும் சர்வதேசப்படுத்தப்பட்ட டொமைன்பெயர்களை 11 மொழிகளில் பரிசோதனை மூலம் பரிட்சைசெய்து பார்க்கலாம்.

“IDN மேம்பாட்டில் இது இன்னுமொரு வியக்கத்தகுக் காலமாகும்” என்று டாக்டர் பால் டூமே, ICANN, தலைவர், முதன்மை செயல் அதிகாரி குறிப்பிடுகிறார். “11 மொழிகளைப்பேசும் இணையப் பயனாளர்கள் எவ்வாறு IDN வேலைசெய்கிறது என்பதை பரிசோதிக்கவும் மற்றும் அனைத்து மொழிகளிலும் அதை முழமையாக எடுத்துச்செல்வதற்கு உதவிடவும் ஒரு முக்கியப் பங்காற்ற முடியும்”.

உலகம் முழுவதும் உள்ள இணையப் பயனாளர்கள் தற்போது wiki (விக்கி) பக்கங்ளை example.test எனும் டொமைன் பக்கங்கள் மூலம் 11 மொழிகளில் – அரபிக், பெர்ஷியன், (எளிமைப்படுத்தப்பட்ட மற்றும் பராம்பரிய) சீன, ரஷ்ய, ஹிந்தி, கிரேக்க, கொரிய, யிடிஷ், ஜப்பானிய மற்றும் தமிழ் மூலம் அணுகலாம். wikis இணைய பயனாளர்களை தங்கள் சொந்தபெயரில் மற்றும் தங்கள் சொந்த மொழிகளில் துணைப் பக்கங்ளை ஏற்படுத்திக்கொள்வதற்கு அனுமதிக்கிறது. ஒரு பரிந்துரை : example.test/yourname.

ICANN மதிப்பீட்டுசெயல்முறையை விளக்குவதற்காக YouTubeல் வீடியோவாக வெளியிட்டுள்ளது. அதன் ஆன்லைன் முகவரி [address here].
விக்கிப் பக்கங்களை 11 மொழிகளில் ஏதாவது ஒன்றின் எழுத்தின் மூலம் example.test என்று எழுதுவதன் மூலம் அல்லது http://idn.icann.org/ க்குசெல்வதன் மூலம் அணுக முடியும்.

“இந்த விக்கிப் பக்கங்கள் இந்த சோதனைக்கு முக்கியமானவையாகும். நாங்கள் URL எவ்வாறு இணைய ப்ரவுசரில் எவ்வாறு காண்பிக்கப்படுகிறது, நீங்கள் அதை உங்கள் நண்பருக்கு வெட்டி ஒட்டி மின்னஞ்சல் மூலம் அனுப்பும்போது செயல்படுகிறதா மற்றும் அது எவ்வாறு மூலப்பகுதியை பாதிக்கிறது என்பதை நாங்கள் அறியவேண்டியுள்ளது” என்றும் டாக்டர் டூமே மேலும் கூறினார்.

ஐடிஎன் முழுமையாக செயல்படுத்தும் வரை இந்த 11 மதிப்பீட்டு விக்கிகள் அன்லைனில் இருக்கும் மற்றும் முதல் உயர்நிலை டொமைன் மதிப்பீடு மொழியில் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

IDNகளின் முழுமையான அறிமுகம் மக்கள் தங்கள் சொந்த மொழியை எழுதப்பயன்படுத்தும் எழுத்துக்களைக் கொண்டே எழுத முடியும் என்று பொருள்படும். தற்போது இந்த எழுத்துக்களை .com, .net, .org புள்ளிக்கு முன்னதாக உள்ளது போன்று அடிப்படை இலத்தின் மொழியில் எழுதமுடியும். IDNகள் பத்தாயிரக்கணக்கான எழுத்துக்களை உலகில் கிடைக்குமாறுசெய்ய மாற்றிவிடும்.

-30-

**ICANNனைப் பற்றி:**

ICANN இணையத்தின் தனித்துவமான அடையாளப்படுத்திகளான டொமைன் பெயர்கள் ( .org, .museum மற்றும் நாட்டு குறிகள் .uk போன்றவை)போன்றவற்றை மற்றும் கணினிகள் ஒன்றுக்கு ஒன்று தொடர்புகொள்ளுவதற்கு உதவும் உலகின் பல்வேறு வகையான இணையப் புரோட்டோகாலில் பயன்படுத்தப்படும் முகவரிகள் ஆகியவிற்றை உலகம் முழுவதிலும் ஒருங்கிணைப்பதற்கான ஒரு பொறுப்பைக் கொண்டுள்ளது. இந்த வளங்களின் கவனமான மேலாண்மை இணைய இயக்கத்திற்கு மிகவும் முக்கியமானது, எனவே ICANN னின் உலகளாவிய பங்குதாரர்கள் வழக்கமான முறையில் சந்தித்து இணையத்தின் தற்போது செயல்பாட்டில் உள்ள பாதுகாப்பு மற்றும் நிலையான தன்மை யை உறுதிப்படுத்துவதற்கான கொள்கைகளை உருவாக்குகிறார்கள். ICANN சர்வதேச அளவில் ஏற்படுத்தப்பட்ட, ஒரு பொது பலனுடைய இலாபநோக்கற்ற நிறுவனமாகும். மேலும் விவரங்களுக்கு தயவு செய்து http://www.icann.org/ க்கு வருகை தரவும்.

**ஊடகத் தொடர்புகள்:**

ஜேசன் கீனன்
ஊடக ஆலோசகர், ICANN (யுஎஸ்ஏ)
தொலைபேசி: +1 310 382 4004
மின்னஞ்சல்: jason.keenan@icann.org

சர்வதேசம் : ஆண்ட்ரூ ராபர்ட்சன்
எடெல்மேன் (லண்டன்)
தொலைபேசி: +44 7921 588 770
மின்னஞ்சல் : andrew.robertson@edelman.com